©
தமிழ்நாடு அரசு
2019

பதிவெண்: எம்.

# திருவள்ளூர் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், ஜனவரி 1, 2019
மார்கழி 17, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049 [ எண் 1

## மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்ட அமுலிலிருந்து நிலங்களை விலக்குதல் பற்றிய அறிவிக்கை

*(ந.க.எண். 5386/2018/ஆ2, நாள்: 29–11–2018.)*

1994ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்படி பஞ்சாயத்துகளில் சட்டம் பிரிவு 134(2) கீழ் இந்த விளம்பரம் சென்னை திருவள்ளூர் மாவட்ட ஜில்லா கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், எண்.54 ஒபசமுத்திரம் கிராமத்தில் அண்ணா பல்கலைகழக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தேசிய மையம் அமைக்க நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இதனடியில் கண்டுள்ள ஷெட்யூலில் குறித்த நிலங்களின் எதிரே குறிப்பிட்டுள்ள விஸ்தீரணமுள்ள நிலங்களை மேற்படி பஞ்சாயத்துகளின் சட்டத்தின் அமுலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றார்.

ஷெட்யூல்

திருவள்ளூர் மாவட்டம்,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
54. ஒபசமுத்திரம் கிராமம்

| புலஎண் | வகைப்பாடு | மொத்த விஸ்தீரணம் | விலக்கப்பட்ட விஸ்தீரணம் |
|---|---|---|---|
| 1/61 | மேய்க்கால் | 70.77.22 ஹெக்டேர்ஸ் | 57.49.50 ஹெக்டேர்ஸ் |

நான்கெல்லை விவரம்:

வடக்கு : ஆந்திர மாநில எல்லையில் அமைந்துள்ள புலிகாட் ஏரி

தெற்கு
1. புல எண். 1/1 Aல் உள்ள மிகுதி நிலம்
2. புல எண். 1/1 Aல் மிகுதி இந்நிலத்தில் அமைந்துள்ள தார்சாலை
3. புல எண். 22ல் மேய்க்கால் நிலம்
4. புல எண். 23ல் மேய்க்கால் நிலம்
5. புல எண். 24ல் மேய்க்கால் நிலம்

கிழக்கு
1. புல எண். 23ல் மேய்க்கால் நிலம்
2. பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட 1. பூங்குளம் கிராமம்

மேற்கு
1. புல எண். 1/1 Aல் உள்ள மிகுதி நிலம்
2. புல எண். 1/1B6–ல் உள்ள பட்டா எண்.53 ஏழுமலை என்பவரின் பட்டா நிலம்
3. புல எண். 1/1B7–ல் உள்ள பட்டா எண்.1450 பாலகிருஷ்ணன் என்பவரின் பட்டா நிலம்
4. புல எண். 2–ல் உள்ள பட்டா எண்.207 சுந்தரம்மாள் என்பவரின் பட்டா நிலம்

திருவள்ளூர்,
2018 நவம்பர் 29.

ஒம்––––––,
*மாவட்ட ஆட்சியர்*
*திருவள்ளூர்.*

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

## திருவேற்காடு நகராட்சி

**திருவேற்காடு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு 01.04.2018 முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண். 1775/2018/அ1 நாள். 16.10.2018)*

அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018-ன் படி தமிழ் நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4-ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் திருவேற்காடு நகராட்சி சொத்து வரியினை 01.04.2018-ல் முதல் பொது சீராய்வு செய்ய மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர் நாள்.20.08.2018-ல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76-ன் படி சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்.

| வ.எண். | சொத்துவரி கட்டிட பயன்பாடு விவரம் | 01.04.2018-ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம். |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்களுக்கு உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள், | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்களுக்கும். | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

திருவேற்காடு நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B, மற்றும் C என மூன்று மண்டலங்களா வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும் அதன் அடிப்படையில் சொத்து வரி சீராய் செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களி தெரிவித்துள்ளவாறு திருவேற்காடு நகராட்சி பகுதியிலுள்ள 424 தெருக்களில் A,B, மற்றும் C என மூன்று மண்டலங்களா வகைப்படுத்தப்பட்டுள்ளன.

<u>A,B, மற்றும் C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரம்</u>

| வரிசை எண். | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | A - Zone | 229 |
| 2. | B - Zone | 145 |
| 3. | C - Zone | 50 |
| | மொத்தம் | 424 |

இந்நகர் மன்ற தீர்மான எண்.481 நாள்.07.09.2018-ன் படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படையில் (Zone Valu 01.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்ப விவரங்கள் திருவேற்காடு நகராட்சி இணையதள முகவரி (https://www.municipality.tn.gov.in/thiruverkadu) மற் திருவேற்காடு நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்விவரங்கள் நேரடியாகவும், மேற்படி இணை தளத்தின் வாயிலாகவும் அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்ட

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | ரூ 1.00 | ரூ 3.00 |
| B | ரூ 0.75 | ரூ 2.50 |
| C | ரூ 0.50 | ரூ 2.00 |

மேலும் திருவேற்காடு நகராட்சியில் உள்ள 424 தெருக்கள் / சாலைகள் A,B, மற்றும் C என மூ மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 10.09.2018-ம் தே தினத்தந்தி நாளிதழில் வெளியிட்டும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டியும் விளம்பரபடுத்தியும், நகரா

இணையதளத்தில் வெளியிட்டும் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி மூன்று ஆட்சேபனை மனுக்கள் வரப்பெற்றுள்ளது. பொது மக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை செய்திட தேவையான நகராட்சி நிதி ஆதாரத்தினை மேம்படுத்திடவும், இந்நகராட்சியில் பல்வேறு திட்ட பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஆதாரம் அவசியமானது என்பதால் நிதி ஆதாரத்தினை மேம்படுத்துவதை கருத்திற்கொண்டு, மேற்படி மூன்று ஆட்சேபனை மனுக்களை நிராகரித்து திருவேற்காடு நகராட்சியில் உள்ள 424 தெருக்கள்/ சாலைகள் A,B, மற்றும் C என மூன்று மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் மேற்காணும் விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பினை இந்நகர்மன்றம் தீர்மான எண்.530 நாள். 10.10.2018–ல் ஊர்ஜிதம் செய்து ஒப்புதல் அளித்து இறுதி செய்யப்பட்டுள்ளது.

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி திருவேற்காடு நகராட்சியில் 01.04.2018–ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்யப்படும்.

2. திருவேற்காடு நகராட்சியில் 424 தெருக்கள் / சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை மதிப்பின்படி (Zone Value) 01.04.2018 முதல் சொத்து வரி உயர்வு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

3. (அ) மண்டலம் A–யின் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 1.00/– லிருந்து ரூ.3.00/– ஆக உயர்வு . செய்யப்பட்டுள்ளதை, நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆ) மண்டலம் B–யின் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 0.75/– லிருந்து ரூ.2.50/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதை, நடைமுறைப்படுத்தப்படும்.

(இ) மண்டலம் C–யின் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 0.50/– லிருந்து ரூ.2.00/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதை, நடைமுறைப்படுத்தப்படும்.

4. தொழிற்சாலைகளுக்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து இரண்டு மடங்கு உயர்வு செய்யப்படும். வணிகப்பயன்பாட்டிற்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து மூன்று மடங்கு உயர்வு செய்யப்படும்.

5. திருவேற்காடுநகராட்சியில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கும் அனைத்து வகையான கட்டிடங்களுக்கும் இந்நகர் மன்றம் தீர்மானம் எண்.530நாள்.10.10.2018 ல் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி, மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக்கொள்ளப்பட்டு சொத்து வரி விதிப்பு செய்யப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

திருவேற்காடு,
2018 டிசம்பர் 5.

ஒம்———,
*ஆணையர்(ம) தனி அலுவலர்*
*திருவேற்காடு நகராட்சி*

## பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சி

**பொன்னேரி பேரூராட்சி 01.01.2019 முதல் குடிநீர் கட்டணம் உயர்த்தி வசூல் செய்தல் குறித்த அறிவிக்கை.**

*(ந.க.எண். 253 /2018/அ2, நாள். 26.10.2018)*

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் மின்கட்டணம் உயர்வு மற்றும் குடிநீர் உதிரிபாகங்கள் விலை உயர்வு ஆகிய காரணத்தால் பொன்னேரி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகள் , வணிகம் , தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் குடிநீருக்காக வசூலிக்கப்படும் மாதாந்திர கட்டணத்தை 01.01.2019 ம் தேதி முதல் உயர்த்தி, பேரூராட்சி மன்ற தனி அலுவலரால் தீர்மானம் எண் 99 நாள் 03.08.2018ம் தேதி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து 01.01.2019 தேதி முதல் கீழ்க்கண்ட விவரப்படி மாதாந்திர குடிநீர் கட்டணம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டு 25.09.2018 ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் குடிநீர் கட்டண உயர்வு குறித்து விளம்பரம் செய்யப்பட்டு, விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மாதாந்திர குடிநீர் கட்டண உயர்வு குறித்து ஆட்சேபணை மற்றும் கருத்துரைகள் ஏதும் இருந்தால் செயல் அலுவலர் பொன்னேரி பேரூராட்சி அவர்களுக்கு எழுத்து மூலமாக ஆட்சேபணை தெரிவிக்க கோரப்பட்டது.